# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102130

1. District மாவட்டம்: Ranipet   PS: காவல்நிலையம்: Vigilance & Anti-Corruption   Year: ஆண்டு: 2024   FIR No.: மு.த.அ. எண்: 01/24   Date: நாள்: 25-3-24

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended PC (Amendment) Act 2018   Sections பிரிவுகள்: u/s 7 of PC (Amendment) Act

(ii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்:

3. (a) Occurrence of Offence Day: குற்ற நிகழ்வு நாள்   Date from: நாள் முதல்: -   Date to: நாள் வரை: 20-03-24 @ 14.30hrs & 21.03.24 @ 14.30hrs

Time Period: நேர அளவு   Time from: நேரம் முதல்: -   Time to: நேரம் வரை:

(b) Information Received at PS Date: காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 25-03-24   Time: நேரம்: 08.00 hrs

(c) General Diary Reference: Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: Vol.I   Time: நேரம்: 25.03.24 @ 08.00 hrs & 09.00hrs.

4. Type of Information: Written/ Oral: தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: 5 Kms East

Beat Number: முறைக் காவல் எண்: -   (b) Address: முகவரி: O/o Tahsildar, Walajah, Survey Section, Taluk office Walajah, Ranipet

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S: -   District: -

இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name: குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: J. Sudhakar   (b) Father's/ Husband's Name: தந்தை / கணவர் பெயர்: Jayaraman

(c) Date / Year of Birth: நாள் / பிறந்த ஆண்டு: 20/5/82 (43 Yrs)   (d) Nationality: நாட்டினம்: Indian   (e) Passport No.: வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்: -

Date of Issue: வழங்கப்பட்ட நாள்: -   Place of Issue: வழங்கப்பட்ட இடம்: -

(f) Occupation: தொழில்: Ex Service man, Running Oil mill   (g) Address: முகவரி: New No 2/106A, Old No. 2/96, Kollai Medu, Arappakkam village, Walajah Taluk, Ranipet District

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Aravind, Surveyor, Walajah Taluk office, Survey Section, Walajah, Ranipet District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்: As he engaged in Personal urgent work.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS ................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

J. Sudhakar

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
S. Vijayalakshmi 25/3/24

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
25.03.24 at 1130hrs.

Name பெயர் S. Vijayalakshmi
Rank நிலை Inspector of Police No எண்
VE PC, Ranipet.

பணிந்து அனுப்பப்படுகிறது: இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் S.விஜயலட்சுமி ஆகிய நான் 25.03.2024 ஆம் தேதி 08.00 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மேலொப்பம் செய்து கொடுத்த புகார்தாரர் திரு.J.சுதாகர், த/பெ ஜெயராமன், புதிய எண்.2/106B, பழைய எண்.2/96, கொள்ளைமேடு, அரப்பாக்கம் கிராமம், வாலாஜா தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் என்பவரின் புகார் மனுவை பெற்று பார்க்க, அனுப்புநர் J.சுதாகர், த/பெ ஜெயராமன், புதிய எண்.2/106B, பழைய எண்.2/96, கொல்லைமேடு, அரப்பாக்கம் கிராமம், வாலாஜா தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம். பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இராணிப்பேட்டை. அய்யா, நான் இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா தாலுக்காவில் உள்ள அரப்பாக்கம் கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு திருமணமாகிவிட்டது. என்னுடைய மனைவி பெயர் நிகேதா. எனக்கு பேரரசு மற்றும் திலக் என்ற இருமகன்கள் உள்ளனர். நான் கடந்த 2019 ஆம் ஆண்டு இந்திய ராணுவத்தில் இருந்து பணி ஓய்வில் வந்துவிட்டேன். தற்போது பூட்டுதாக்கு கிராமத்தில் சொந்தமாக பேரரசு என்ற பெயரில் எண்ணெய் செக்கு கடை நடத்தி வருகிறேன். நான் கடந்த 09.02.2024 ஆம் தேதி வாலாஜாபேட்டை, பெல்லியப்பா நகரை சேர்ந்த திரு.சரவணன் என்பவரிடமிருந்து செங்காடு கிராமத்தில் உள்ள ஷீரடி சாய் நகர் மனைபிரிவில் 1200 சதுரடி அளவுள்ள மனை எண்.118-ஈ ரூ.1,08,000/-க்கு வாலாஜா சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.662/2024 மூலம் கிரையம் பெற்றேன். அப்போது வாலாஜாசார் பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி மனைக்கான பட்டா மாறுதல் குறித்த விண்ணப்பம் நேரடியாக வாலாஜா தாலுக்கா அலுவலத்திற்கு online மூலம் அனுப்பப்படும் என்றும் நான் தனியாக விண்ணப்பம் ஏதும் தரவேண்டாம் என சொன்னார்கள். பின்னர், கடந்த 18.03.2024 அன்று காலை சுமார் 10.30

மணிக்கு வாலாஜா தாலுக்கா அலுவலத்தில் இருந்து சர்வேயர் அரவிந்த் என்பவர் அவருடைய செல்போன் எண்.8778344241-லிருந்து என்னுடைய செல்போன் 8825632655 என்ற எண்ணிற்கு போன் செய்து என்னை அன்று வர சொன்னார். நான் அதற்கு மதியம் வருவதாக சொன்னேன். ஆனால் எனக்கு உடல்நிலை சரியில்லாததால் அன்று மதியம் செல்ல முடியவில்லை. திரும்ப சர்வேயர் அரவிந்த் அவர்கள் சுமார் 3 மணிக்கு எனக்கு போன் செய்து ஏன் இன்னும் வரவில்லை என்று கேட்டார். அதற்கு நான் எனக்கு காய்ச்சல் இருப்பதால் என்னால் வர முடியவில்லை என்று சொன்னதற்கு அவர் என்னை மறுநாள் வரும்படி சொல்லிவிட்டு போனை வைத்து விட்டார். பிறகு அன்று இரவு 9.10 மணிக்கு மீண்டும் எனக்கு போன் செய்திருந்தார். அந்த சமயம் என்னால் எடுக்க முடியவில்லை. பின்னர் நான் அவருக்கு போன் செய்த போது தனக்கு மறுநாள் எலக்ஷென் டியூட்டி இருப்பதாகவும் 20.03.2024 அன்று என்னை வர சொல்லியும் போனை வைத்துவிட்டார். நான் 20.03.2024 ஆம் தேதி காலை சர்வேயருக்கு போன் செய்த போது சுவிட்ச் ஆப் ஆக இருந்தது. பின்னர் அவர் எனக்கு காலை போன் செய்து என்னை வரும்படி சொன்னார். உடனே நானும் என்னுடன் என்னுடைய மனைக்கு எதிரில் உள்ள மனை எண்.110-ஐ வாங்கியுள்ள எனது நண்பர் அருண்குமாரும் வாலாஜா தாலுக்கா அலுவலகம் போய் நான் சர்வேயர் அரவிந்துக்கு போன் செய்தேன். அவர் உடனே என்னை செங்காட்டில் உள்ள மனை பிரிவிற்கு நேராக வந்தவிடுமாறு சொன்னதால் நாங்கள் இருவரும் உடனே செங்காடு சென்றோம். நாங்கள் செல்வதற்கு முன்பாகவே அவர் அங்கு வந்ததால் அவர் எனக்கு போன் செய்து எங்கிருக்கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு நான் வந்துக்கொண்டிருப்பதாக சொல்லி சுமார் 2.30 மணிக்கு அங்கு சென்றுவிட்டோம். பின்னர் அவர் என்னுடைய மனையை காண்பிக்க சொல்லி அளந்தார். அவருக்கு உதவியாக இருந்தோம். பின்னர் அவர் மேற்படி மனையின் ஆவண நகல்களை கேட்டார். நானும் அதன் நகல்களை கொடுத்தேன். அதன் பின்னர் சர்வேயர் அரவிந்த் அவர்கள் ரூ.5,000/- கொடுத்தால் தான் சப் டிவிஷன் செய்து பட்டா மாறுதல் செய்வதற்கான வேலைகளை உடனே முடித்து தருவதாக சொன்னார்.

அதற்கு நான் என்னால் அவ்வளவு கொடுக்க முடியாது என்று சொன்னதற்கு சரி ஒரு 3,500 ரூபாய் கொடுத்து விடுங்கள் உடனடியாக வேலையை முடித்துவிடுகிறேன் என்று சொன்னார். அப்போது என் நண்பர் அருண்குமார் தன்னுடைய மனைபிரிவின் ஆவணங்களை காண்பித்து தனது மனை பிரிவிற்கும் பட்டாமாறுதல் செய்யவேண்டும் என்று கேட்டார். அதற்கு அவர் online-ல் விண்ணப்பிக்கும்படி சொன்னார். பின்னர் மறுநாள் 21.03.2024 அன்று நான் பகல் சுமார் 2.30 மணிக்கு சர்வேயர் அரவிந்தை அவருடைய அலுவலத்தில் சென்று பார்த்து என்னுடைய பட்டாமாறுதல் குறித்து கேட்டபோது ஏற்கனவே நான் கேட்டபணம் ரூ.3,500/- எங்கே என்று கேட்டார். அதற்கு நான் தற்போது என்னிடம் இல்லை என்றும் என்னால் அவ்வளவு கொடுக்கமுடியாது என்று சொன்னதற்கு, அவர் சரி உங்களுக்கு மட்டும் 500 குறைத்துக்கொண்டு மீதம் ரூ.3,000/- பணத்தை கொடுத்தால் தான் வேலை முடியும் என்று கறாராக சொன்னார். பின்னர் நான் கேட்ட பணம் ரூ.3,000/-யை எடுத்துக்கொண்டு வெள்ளிக்கிழமை (22.03.2024) இல்லனா திங்கள்கிழமை (25.03.2024) வாலாஜா தாலுக்கா ஆபீசுக்கு வாங்க என்று சொல்லி அனுப்பி வைத்தார். எனக்கு யாருக்கும் ரூ.3,000/- ஐ லஞ்சமாக கொடுத்து சப் டிவிஷன் செய்து பட்டா பெற விருப்பமில்லை. எனவே, என்னுடைய ஆன் லைன் அப்ளிகேசனுக்கு சப் டிவிஷன் செய்து பட்டா பெயர் மாற்றம் செய்ய பரிந்துரை செய்ய என்னிடம் ரூபாய் மூவாயிரத்தை லஞ்சமாக கேட்கும் வாலாஜா தாலுக்கா அலுவலகத்தை சேர்ந்த சர்வேயர் அரவிந்த் அவர்கள் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நான் எனது தொழில் சம்மந்தமான அவசர வேலை இருந்ததால் என்னால் உடனடியாக இராணிப்பேட்டை விஜிலென்ஸ் ஆபீஸிற்கு வந்து புகார் கொடுக்கமுடியவில்லை. இந்த புகார் மனுவுடன் நான் வாலாஜா சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்த ஆவண எண்.664/2024-ன் நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். இப்படிக்கு,

Sd/-xxxxxx (J Sudhakar) 25/03/2024

Sir,

Received the complaint on 25.03.2024 at 08.00 Hrs., after due verification, Inspr. Tmt.S.Vijayalakshmi to Register a case. Sd/- xxxxxxxxxxx (V.Ganesan) 25/3/2024. Dy. Supdt. of Police, V&AC, Ranipet District.

Sir,

Received the complaint on 25.03.2024 at 08.00 Hrs. after verifying the antecedents of the accused and credibility of the complainant, I have registered a case in Ranipet V&AC Cr.No.01/2024 u/s 7 of P.C. Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 on 25.03.24 at 09.00 hrs. Sd/- xxxxx (S.Vijayalakshmi) 25/3/24 Inspector of Police, Vigilance & Anti-Corruption, Ranipet.

The FIR in original along with the complaint and its enclosure sent to the Hon'ble CJM and Special Judge, Vellore and other copies to the Officers concerned.

S. Vijayalakshmi 25/3/24
(S.VIJAYALAKSHMI),
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Ranipet.